[1994 மே 2

478—

நீலகிரி படகர் இன மக்களை மலைஜாதியினர் பட்டியலில் சேர்த்தல்

*** *24118*—*திருமதி கே. மரியம் உல் ஆசியா :***

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டத்தில் வாழும் படகர் இன மக்களை மலை ஜாதியினர் பட்டியலில் சேர்க்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நீலகிரி மாவட்டத்தில் வாழும் படகர் இனமக்களை மலை ஜாதியினர் பட்டியலில் சேர்ப்பதற்காக மைய அரசிற்கு தமிழக அரசு பரிந்துரை செய்துள்ளது. பரிந்துரையின் மீது மைய அரசின் பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1936 முதல் 1948 வரை இந்த படகர் இன மக்கள் ஆதிவாசிகள் பட்டியலில் சேர்க்கப்பட்டிருந்து பின்னர் அதை நீக்கிவிட்டார்கள். இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த படகர் இன மக்களை மலைவாசிகள் பட்டியலில் சேர்ப்பதற்காக மத்திய அரசை வலியுறுத்தி இருப்பதாகக் கூறினார்கள். கடந்த 45 ஆண்டுக்காலமாக பட்டியலில் சேர்க்கப்படாது இருந்த அந்த படகர் இன ஆதிவாசிகள் சமுதாயத்தை மலைஜாதியினர் பட்டியலில் சேர்க்க இதுவரையில் எந்த அரசும் கண்டு கொள்ளாமல் இருந்த நிலையில் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்தான் முதன் முறையாக படகர் இன மக்களை மலைஜாதியினர் பட்டியிலில் சேர்க்க மத்திய அரசை வலியுறுத்தி கடிதம் எழுதியுள்ளார்கள் என்பதற்காக அந்த படகர் இன மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.. மேலும் உத்திர பிரதேச மாநிலத்தில் அங்குள்ள ஆதிவாசிகள் சமூகத்தை மலைஜாதியினர் பட்டியில் சேர்க்க வேண்டும் என்று அந்த மாநில அரசு கோரிக்கை விடுத்த போது மத்திய அரசு அதை ஏற்றுக் கொண்டு அந்த ஆதிவாசிகளை மலை ஜாதியினர் பட்டியலில் சேர்த்திருக்கிறார்கள். ஆனால் தமிழகத்தைப்பொறுத்த வரையில் நமது கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு ஏனோ தாமதம் செய்துக் கொண்டிருக்கிறார்கள். மேலும் படகர் உள்ளிட்ட அனைத்து மலை ஜாதியினரின் அனுபவத்தில் உள்ள நிலங்களை முறைப்படுத்தி

1994 மே 2]

அந்த ஆதிவாசிகளிடம் ஒப்படைக்கவும், படகர் இனத்தைச் சார்ந்த விவசாயத் தொழிலாளர்களுக்கு நிலப்பட்டா, வீட்டு மனைப்பட்டா வழங்கவும் அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி ஜாதியைப் பற்றியது. அவர் நிலத்தைப் பற்றி கேட்கிறார். தனியாகக் கேள்வி போட்டால் தகுந்த புள்ளி விவரத்தோடு சொல்ல முடியும்.

திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பழங்குடியின மக்கள் பொருளாதார ரீதியில் உயர கல்வி மற்றும் வேலை வாய்ப்பு பெற தனிக் கவனம் செலுத்தி உதவும் வகையில் பழங்குடி இன மக்களின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, தாழ்த்தப்பட்ட மக்கள் நலத்துறை என்று தனியாக ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதெல்லாம் இந்தக் கேள்வியிலே வராது. தனிக் கேள்வி போடவும். டாக்டர் எம். கருப்புசாமி.

டாக்டர் எம். கருப்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் வசித்து வரும் படகர் இன மக்கள் வாழையடி வாழையாக தனிப்பெரும் தன்மையோடு கட்டுப்பாடான சட்டத் திட்டங்களையும் மத கோட்பாடுகளையும் சீரான சீரிய கொள்கைகளையும் கொண்டு அட்டி என்று சொல்லக்கூடிய இடங்களில் வசித்து வருகிறார்கள். கள்ளம் கபடம் இல்லாமல் கனிவோடு உபசரிக்கும் பண்பு அவர்களுடைய தனிச் சிறப்பாகும். மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அவர்களை மலை ஜாதியினர் பட்டியலில் சேர்ப்பதற்காக மத்திய அரசுக்கு பரிந்துரை செய்ததற்கு நன்றி. அந்த படகர் இன மக்கள் நீலமலையைத் தவிர வேறு எங்கும் அவர்களுக்கு பூர்வீக சொத்து இல்லாத வகையில், தொடவர், குறும்பர், படகர் ஆகிய அனைவரும் நீலமலையையே சொந்தமாகக் கொண்டு பல நூற்றாண்டு காலமாக வசித்து வருகிறார்கள். படகர் இன மக்களில் ஒரு சிலர் வசதிபட்டவர்களாக இருந்தாலும் பெரும்பாலும், தனிச் சரித்திரத்தை படைத்துக் கொண்டிருக்கும் அந்த படகர் இன மக்கள் சிறிய விவசாயிகளாக . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள்.

டாக்டர் எம். கருப்புசாமி: ஆண்களும் பெண்களும் தத்தம் சிறிய தோட்டங்களில் வேலை செய்யும் பெரிய உழைப்பாளிகள் ஆவார்கள்.

ஆகவே படகர் சமுதாயத்தை, அவர்களின் எதிர்கால சந்ததியினர் வாழ்வு சிறக்கவும், அந்த சமுதாயத்தை தனிப்பெரும் தன்மையோடு வாழ்வாங்கு வாழவைக்கும் முறையிலே, மலையிலேயே பிறந்து மலையிலேயே வாழ்ந்து கொண்டிருக்கும் அவர்களை மலை ஜாதிப்பட்டியலில் விரைவாகச் சேர்ப்பதற்கு தமிழக அரசு மீண்டும் ஒரு முறை மத்திய அரசை வலியுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மலை வாழ் மக்களிடம் கொண்டிருக்கும் அன்பையும் பாசத்தையும் நாம் கண்கூடாகப் பார்த்திருக்கிறோம். ஊட்டியில் ஒரு நிகழ்ச்சியில் அந்த மக்கள் வைத்த கோரிக்கையை ஏற்று முதலமைச்சர் அவர்கள், அவர்கள் நடத்திய நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அந்த மக்களைப் பெருமைப் படுத்தினார்கள். அந்த மக்களை மகிழ்ச்சி அடைய வைத்தார்கள். அப்பேர்ப்பட்ட முதலமைச்சருடைய ஆட்சிக் காலத்தில் இந்தக் கோரிக்கை மத்திய அரசுக்கு மீண்டும் வலியுறுத்தப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 479, திருமதி கவிநிலவு தர்மராஜ், இருக்கையில் இல்லை.

வினா எண் 480, டாக்டர் ஜெ. பரந்தாமன். மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

480—

பேரணாம்பட்டு தொகுதி, மாதனூர் பிற்பட்டோர் நல மாணவர் விடுதிக்குக் கட்டிடம் கட்டுதல்

** 26203—டாக்டர் ஜெ. பரந்தாமன்:*

மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேரணாம்பட்டு தொகுதி, மாதனூர் பிற்பட்டோர் நல மாணவர் விடுதிக்கு நிரந்தரக் கட்டிடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், பேரணாம்பட்டு தொகுதி மாதனூரில் தனியார் கட்டிடத்தில் இயங்கும் பிற்படுத்தப்பட்டோர் நல